வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு. A. கந்தகுமார். எம்.எல்.,

மாவட்ட நீதிபதி (மு.கூ.பொ), மயிலாடுதுறை,

அமர்வு வழக்கு எண் 52/2023

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 10 | நாள் | 01.08.2023 |
| பெயர் | ரவிச்சந்திரன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் தற்போது வைத்தீஸ்வரன் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றுகிறேன். சம்பவத்தின் போது நாகப்பட்டினம் ஆய்த படையில் காவலராக இருந்து பாலையூர் காவல் நிலைய காவல் ஓட்டுநராக பணியாற்றியபோது 13.03.2003 தேதி மயிலாடுதுறையில் நடக்கும் ஊர்வல பாதுகாப்பு பணிக்கு ஆய்வாளர் அமிர்தகுமாருடன் மயிலாடுதுறை வந்தும், அன்று மாலை சுமார் 7 மணிக்கு காவேரி நகர் ரயிலடியில் இருந்து ஊர்வலம் புறப்பட்டது ஆய்வாளர் மற்றும் காவலர்கள் ஊர்வல முன்பகுதியில் பாதுகாப்புக்காக சென்றுகொண்டிருந்தனர். நான் ஊர்வலத்தின் பின்புறம் வாகனத்தில் வந்துகொண்டிருந்தேன். சுமார் 7.30 மணியளவில் மயிலாடுதுறை கூறைநாடு செம்மங்குளம் அருகில் ஊர்வலம் வந்துகொண்டிருந்தபோது நம்பர் 1 ரோட்டில் செல்லவேண்டிய ஊர்வலத்தினர் கோஷம் போட்டுக்கொண்டும் மெயின்ரோட்டில் கடைத்தெருவழியாகதான் செல்வோம் என்று தகறாறில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர் என்று கேள்விப்பட்டு. போலிசார் அவர்களை தடுத்து நிறுத்தி விரட்டவே அவர்கள் கற்களாலும், கட்டையாலும் போலிசார்களை தாக்கினர். போலிசார் விரட்டியபின் நம்பர் 2 தெருவில் நிறுத்தியிருந்த 2 பேருந்துகளை அடித்து நொருக்கியதாகவும், ஊர்வலம் சென்றுவிட்டது. நான் பின்பு ஊர்வலத்தில் முன்பு வந்து விசாரித்து மேற்படி சம்பவம் பற்றி தெரிந்துகொண்டேன். போலிசாரை தாக்கியதில் காயம்பட்ட உதவிஆய்வாளர் முருகையன், தலைமை காவலர் தயாளன், ஆய்வாளர் அமிர்தகுமார், மற்றும்

காவலர்கள் காயம்பட்டவர்கள் அவரவர்கள் நண்பர்கள் மூலமாகவும் வாகனத்தின் மூலமாகவும் மருத்துவ சிகிச்சைக்கு சென்றனர். ஆய்வாளர் அமிர்தகுமார் மற்றும் தலைமை காவல் தயாளன் இவர்களை நான் ஓட்டிவந்த வாகனத்தில் ஏற்றிக்கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். நான் அங்கு மருத்துவசிகிச்சைக்காக மருத்துவமனைக்கு ஏற்றும்போது சுமார் 30,40 நபர்கள் சீறிவரும் சிறுத்தையிடம் மயிலாடுதுறை தாங்குமா தாங்குமா என்று கோஷம் போட்டுக்கொண்டிருந்தார்கள். ஆய்வாளர் என்னை விசாரிக்க நடந்த விவரத்தை சொன்னேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சம்பவ தேதியில் நாகப்பட்டினம் ஆய்த பிரிவில் பணியாற்றிதற்கு ஜீப் பாலையூர் காவல் நிலையத்தில் ஓட்டுநராக நான் பணியாற்றி உள்ளேன் என்பவதற்கு வாகன நாட்குறிப்பு உள்ளதா என்றால் சரிதான் வாகன நாட்குறிப்பு உள்ளது. ஆய்வாளர் விசாரணையின்போது வாகன நாட்குறிப்பை பார்வையிடவில்லை. வாகன நாட்குறிப்பு வாகனத்திற்கு அன்றைய தேதியில் எதுவும் பதிவு செய்யப்படாத காரணத்தினால் பார்வையிடவில்லை என்று நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 13.03.2003 அன்று பாலையூர் காவல் ஆய்வாளருக்கு வாகனம் ஓட்டியதற்கு குறிப்பு எதுவும் நான் காண்பிக்கவில்லை என்றால் இல்லை. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றால் சரிதான். நான் சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் நான் இல்லை என்பதால் நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். அன்றைய தினம் நம்பர் 1 ரோடு வழியாக ஊர்வலம் சென்று மகாதான தெருவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது என்றால்சரிதான். நான் சொல்லக்கூடிய நேரத்தில் மகாதான தெருவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது என்று சொன்னால் ஞாபகம் இல்லை. நான் சொல்வதுபோது நானும், பாலையூர் ஆய்வாளரோ ஊர்வல பாதுகாப்பு பணியில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர்மற்றும் காவலர்களுக்கு நான் சொல்வதுபோல் காயம் எதுவும்எதிரிகளால் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.விடுதலை சிறுத்தை கட்சி மதமாற்ற தடைச்சட்டத்திற்கு எதிராக தமிழகம் முழுவதும் எங்கும் பொது கூட்டம் நடைபெறக்கூடாது என்பதற்காக தமிழ்நாடு அரசு அறிவுறுத்தலின்பேரிலும் பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காவலர்களுக்கு ஏற்பட்ட காயம் அவர்களாளே தன்னிச்சையாக வழக்கிற்காக ஏற்படுத்திகொண்டார்கள் என்றால் சரியல்ல. கூட்டத்தில் வந்த நபர்கள கோஷம் போட்டார்கள் என்று வாழக்கிற்காக

நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது உயர்அதிகாரியின் அறிவுறுத்திலின்பேரில் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.